# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் தேதிகாலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech., தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சி பொறியியல் பிரிவில் , மதிப்பீடுகள் தயார் செய்தல் திட்டப் பிரேரணைகள் தயார் செய்தல் மற்றும் தினசரி அறிக்கைகள் அனுப்புதல் போன்ற பணிகளுக்கு பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக தொழில்நுட்ப உதவியாளராக பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும். அதற்கான ஒருவருட உத்தேச செலவினம் ரூ.280000/— மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 171 அனுமதிக்கப்பட்டது.** |
| 2 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் நேரடி ஆய்வு அறிவுரையின்படி, இராமேஸ்வரம் நகராட்சி அவசர அவசிய பணிகளான தெருமின் விளக்குகள் பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள் ஓட்டுநர்கள் பணிகளை சுயஉதவி குழுக்கள் மூலம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இராமேஸ்வரம் நகராட்சியில் மாவட்ட ஆட்சியரின் | **தீர்மானம் எண். 172 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | தினக்கூலி அடிப்படையில் உள்ள 7 -தற்காலிக ஓட்டுநர் பணிகளை M/s விவேகனந்தா ஆடவர் சுய உதவி குழுக்கள் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம். | |
| **3** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளின் வரி விதிப்பு எண்ணிக்கைக்கேற்ப குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கையினையும் கூடுதலாக வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க. எண். 13277/2018/WS1, நாள். 19.06.2018–ன்கடிதத்தில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 69.00 இலட்சத்தினை TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கி கடிதம் வரப்பெற்றது. அதனை தொடர்ந்து மேலாண்மை இயக்குநர் TUFIDCO சென்னை அவர்களின் கடிதம் எண். TUFIDCO/URF1819-33 ULBs/AM(M)/2018 நாள்: 15.10.2018 கடன் அனுமதி கடிதத்தில் இந்நகராட்சிக்கு 2000 எண்ணிக்கையில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு திட்ட நிதியாக ரூ. 60.66 இலட்சம் URF-1819-023 என்ற திட்ட எண்ணில் (Scheme No) வட்டியில்லா கடன் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு இத்திட்ட உடன்படிக்கையில் உள்ளபடி வட்டியில்லா கடன் தொகையினை குறிப்பிட்ட காலத்தில் திரும்ப செலுத்திடவும், இப்பணிக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 69.00 இலட்சத்தில் இந்நகராட்சிக்கென ஒதுக்கீடு செய்த திட்ட நிதி ரூ. 60.66 இலட்சம் போக மீதமுள்ள GST+Others ரூ. 8.34 இலட்சத்தினை ஈடுசெய்வதற்கு இந்நகராட்சியில் நிதி நிலை திருப்திகரமாக இல்லாத காரணத்தால் (CGF) மூலதன மானிய நிதி அல்லது பிற தலைப்புகளில் மானிய நிதி அரசிடம் பெற்று பணி மேற்கொள்வதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 173 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கட்கு பிரேரணை சமர்ப்பித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம். | |
| **4** | இராமேஸ்வரம் நகராட்சி தொடர்பான அறிவிக்கைகளை கீழ்க்கண்ட நாளிதழ்கள் வாயிலாக பிரசுரம் செய்ததற்கு விளம்பர கட்டணஙகள் செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. The Hindu –19656<br>2. Makkal Kural –10500<br>3. Malai Thamilagam –16800<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 174 அனுமதிக்கப்பட்டது.** |
| **5** | இராமேஸ்வரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு பொது சுகாதார உபகரணங்கள் வாங்கியதற்கு செலவினம் ரூ.1185476/– 'Sri Balaji Marketing' நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>பணிகளின் அவசர அவசியம் கருதி பொது சுகாதார உபகரணங்கள் வாங்கியதற்கான செலவினை மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 175 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td>6</td><td>இராமேஸ்வரம் நகராட்சி தொடர்பான சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.24000/– வழக்கறிஞர் திரு.M.கண்ணன் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br><br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 176 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>7</td><td>இராமேஸ்வரம் நகராட்சி பொது சுகாதார வாகனங்களை பழுது பார்க்கும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>விலைப்புள்ளி</td></tr>
<tr><td>1</td><td>Sri Vignesh Engineering Works,<br>Ramanathapuram</td><td>198660</td></tr>
<tr><td>2</td><td>AR Engineering Works,<br>Ramanathapuram</td><td>202356</td></tr>
<tr><td>3</td><td>NS Auto Electricals ,<br>Ramanathapuram</td><td>195365</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br><br>• மேற்காணும் பணியானது பொதுசுகாதாரப்பணி ஆதலால், அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.<br>• மேற்காணும் நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள NS Auto Electricals நிறுவனத்தினை ஏற்கலாம்</td><td>தீர்மானம் எண். 177 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>8</td><td>இராமேஸ்வரம் நகராட்சிபகுதியில், நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டினை தடுக்கும் பொருட்டு, இந்நகராட்சி குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளில், தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம்</td><td>தீர்மானம் எண். 178 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | செய்த வகையில் நிறுவனம் பிளஸ்ஸிகா வாட்டர் சப்ளை க்கு ரூ.88350/ – வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>• மேற்காணும் பணியானது குடிநீர் திட்டப்பணி ஆதலால், அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம். | |
| **9** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் நீரேற்று நிலையங்களில் liqud குளோரிநேசன் கலந்து கொடுக்க ஏதுவாக குளோரிநேசன் பிளான்ட் புதயதாக மாற்றியமைக்கவும், நான்கு எண்ணம் குளோரினேசன் பிளான்ட் பொருத்தும் பணிக்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>• மேற்காணும் பணியானது குடிநீர் திட்டப்பணி ஆதலால், அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 179 அனுமதிக்கப்பட்டது.** |

ஆணையாளர்/தனிஅலுவலர்,
இராமேஸ்வரம் நகராட்சி.